# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் 5 ஆம் ஞாயிறு | 18 மே 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

குடும்பம் - சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு துணையாக இருக்க அழைப்பு

# சீடத்துவத்தின் இதயம் அன்பு

சவால்கள் மற்றும் இடர்களுக்கு மத்தியில் அன்பு மற்றும் அக்கறையுடன் குடும்பம் மற்றும் சமூகத்துடன் துணையாக இருக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

பவுலும் பர்னபாவும் யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் நற்செய்தியைப் பரப்புவதில் ஓய்வின்றி உழைத்தனர். தெர்பே நகரத்திற்குப் பிறகு அவர்களின் பணி முடிவில் அவர்கள் ஏற்படுத்திய அனைத்து சமூகங்களையும் மீண்டும் பார்வையிட்டனர்.



அவர்கள் அங்குள்ள சீடர்களை ஊக்குவித்து, அவர்களை ஒழுங்கமைத்து, ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்களை நியமித்து அவர்களை ஆண்டவருக்குள் ஒப்படைத்தனர். அவர்கள் தங்களுடைய நம்பிக்கையில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க முடியும் என்பதை உறுதி செய்வதற்காகவே, கடவுளின் அரசில் நுழையும் வகையில் இன்னல்களை எதிர்கொண்டு தங்களின் நம்பிக்கையில் விடாமுயற்சியுடன் இருக்க சீடர்களை வலியுறுத்தினர். கடவுள் தங்களுக்குச் செய்த அனைத்திற்கும் சாட்சியமளித்தனர். மேலும் அவரது அரசு நம்பிக்கையுள்ள அனைவருக்காகவும் திறந்திருக்கிறது. அவர்களின் முன்மாதிரியான சாட்சியத்தின் மூலம் பிறருடன் நம் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்வது நம்முடைய பணியாகும்.

இரண்டாம் வாசகத்தில் யோவானின் காட்சி நமக்கு எதிர்நோக்கைத் தருகிறது. எதிர்நோக்கின் திருப்பயணிகளாக நம்மிடையே, கடவுளின் நிலையான உடனிருப்பு இருப்பதை நாம் உறுதி செய்கிறோம். ஒரு புதிய வானம் ஒரு புதிய பூமி ஒரு புதிய யெருசலேமும் விண்ணகத்திலிருந்து இறங்கிவருவதை அவர் கண்டார். கடவுளின் உறைவிடம் மக்களிடையே உள்ளது. அவர் நமது கடவுளாய் இருப்பார். நாம் அவருக்கு மக்களாய் இருப்போம். அவர் நம்மை ஆற்றுப்படுத்துவார். இனி துன்பம் இராது. உலகில் இனி தீமையோ துன்பமோ இல்லாதபோது அனைத்தும் புதியனவாக மாறும்.

நற்செய்தியில் இயேசு கடவுளிலும் கடவுள் அவரிலும் மாட்சிப்படுத்தப்படுவதைப் பற்றிப் பேசினார். இறுதி இராவுணவின்போது தான், வரவிருக்கும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிக் குறிப்பிட்டார். பின்னர் அவர் அப்போஸ்தலர்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுத்தார். அவர் அவர்களை அன்பு செய்ததுபோல ஒருவரையொருவர் அன்பு செய்யவேண்டும்.

புதியது என்னவென்றால், 'நான் உங்களை அன்பு செய்ததுபோல' என்பது அன்பின் பொருளுக்கு ஒரு அளவை உயர்த்துகிறது. இதில் தியாகம் உள்ளது. அவர் சொல்வதுபோல நாம் செய்யவேண்டுமென்றால் கூடுதலாக நாம் தியாகம் செய்யவேண்டிய அவசியம் உள்ளது. மற்றவர்கள் நம்மை அவருடைய சீடர்கள் என்று அறிந்துகொள்வது இப்படித்தான் இருக்கும். நம் குடும்பங்களிலும் சமூகங்களிலும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதன் மூலம், நாம் அவருடைய சீடர்கள் என்பதைப் பிறர் அறிந்துகொள்வார்கள். ✜

> தொலைவில் உள்ள மக்களை அன்பு செய்வது மிக எளிது. நமக்கு நெருக்கமானவர்களை அன்பு செய்வது எப்போதும் எளிதல்ல. உங்கள் வீட்டிற்குள் அன்பைக் கொண்டுவாருங்கள். ஏனென்றால் ஒருவருக்கொருவர் அன்பைத் தொடங்கவேண்டிய இடம் இங்குதான்.
>
> **கொல்கொத்தாவின் புனித திரேசா**

**இன்றைய இறைவார்த்தை:**

**திருத்தூதர் பணிகள்: 14: 21-27**

**திருப்பாடல்: 145: 8-13**

**திருவெளிப்பாடு: 21: 1-5**

**யோவான் 13: 31-35**

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org